# கொழும்புப் பல்கலைக்கழகம், இலங்கை

## சட்டபீடம்

### சட்டமாணிப் பரீட்சை (நிகழ்நிலை) – ஆண்டு IV, 2022

### வரிச்சட்டம்

(மூன்று மணித்தியாலம்)

வினாக்களின் மொத்த எண்ணிக்கை: 06

**எவையேனும் மூன்று (03)** வினாக்களுக்கு **மட்டும்** விடை தருக.

(தெளிவற்ற கையெழுத்திற்குப் புள்ளிகள் குறைக்கப்படும்.)

---

1. ‘வரிக் கோட்பாடுகளானவை, சட்டம் இயற்றுபவர்களுக்கு மற்றும் ஆளும் அமைப்புக்களுக்கு உத்திகளை வகுத்து, அவற்றினைச் செயற்படுத்துவதற்கு வலுவானதொரு வரிக்கட்டமையினை உறுதி செய்வதற்குத் திட்டமிட உதவும் வழிகாட்டுதல்களின் தொகுப்பொன்றாகும். இது வருவாயை அதிகரிப்பது மட்டுமல்லாது பிரஜைகளுக்குச் சமூக மற்றும் பொருளாதாரச் சமத்துவத்தினையும் ஏற்படுத்துவதனை நோக்கமாகக் கொண்டுள்ளது.’

   இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடியில் வரிவிதிப்புக் கொள்கைகள் எந்தளவிற்குத் தாக்கத்தினை ஏற்படுத்தியிருக்கின்றன என்பதனை ஆராய்வதுடன் இந்நிலைமையைச் சீர்செய்வதற்கு எடுக்கப்படக்கூடிய நடைவடிக்கைகளைப் பரிந்துரைக்க.

   (100 புள்ளிகள்)

2. இரு பகுதிகளுக்கும் விடையளிக்க.

   அ) ‘வரித் தவிர்ப்பு மற்றும் வரி ஏய்ப்பு (Tax avoidance and Tax Evasion) ஆகியவை, குறிப்பாக, வருவாய் ஈட்டுதலின் குறைப்பு மற்றும் வரிச்சுமையினைக் குறைக்கும் அதே விருப்பத்தினை அடிப்படையாகக் கொண்ட ஒரே ஒத்த விளைவுகளை ஏற்படுத்துகின்றன. இருப்பினும், ஒன்று மற்றொன்றின் தாக்கங்களிலிருந்து வேறுபட்டவை.’

   பொருத்தமான நியதிசட்ட ஏற்பாடுகள் மற்றும் தீர்க்கப்பட்ட வழக்குகளுடன் தொடர்புறுத்தி வரித் தவிர்ப்பு மற்றும் வரி ஏய்ப்பு ஆகியவற்றின் கருத்தேற்ப்புக்களை மேலிட்டுக்காட்டுக.

   ஆ) ‘ உண்ணாட்டு வருமானவரி ஆணையாளர் தலைமையதிபதிக்கு (Commissioner General) வரித் தவறுகையின் (Tax in default) போது அதனை அறவிடுவதற்குப் பாரிய அளவிலான அதிகாரங்கள் இருப்பதனால் அவை வரிசெலுத்துனரை எதிர்மறையாகப் பாதிக்கலாம்.’

தற்போதய 2017ம் ஆண்டின் 24ம் இலக்க உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் ஏற்பாடுகளைத் தொடர்புறுத்தி மேற்குறிப்பிட்ட கூற்றின் வலிதாந்தன்மையை விமர்சன ரீதியாக பகுப்பாய்வு செய்வதுடன் உமது விடையினைப் பொருத்தமான உதாரணங்களால் ஆதாரப்படுத்துக.

(50 X 02 = 100 புள்ளிகள்)

3. பேராசிரியர். ரவி சுப்பிரமணியம் என்பவர் கொழும்பு Metropolitan பல்கலைக்கழகத்தின் மாணவ ஆலோசகர் பிரிவினைச் சேர்ந்த நன்கு தேர்ச்சி பெற்ற சிரேஸ்ட பேராசிரியரொருவராவார். அவர் பிரதானமாக நேர்மறையான எண்ணங்கள் தொடர்பான விரிவுரைகள் மற்றும் பயிற்சிப்பட்டறைகளை நடாத்துவதுடன் மாதந்த சம்பளமொன்றாக வாழ்க்கைச் செலவு மற்றும் ஆராய்ச்சி கொடுப்பனவுகள் உள்ளடங்கியதாக ரூபா.400,000/- த்தினைப் பெறுகின்றார். தற்போது, அப்பிரிவில் இயக்குனராக (Director) பணிபுரியும் அவர், மாதாந்த சம்பளத்துக்கு மேலதிகமான கொடுப்பனவொன்றாக ரூபா.20,000/- த்தினைப் பெறுகின்றார். அப்பல்கலைக்கழகமானது எரிபொருள் மற்றும் சாரதியொருவனை வழங்குகின்றது. அதற்கான மதாந்த செலவு ரூபா.150,000/-. 2020ம் ஆண்டு ஜனவரி மாதம் சிங்கப்பூரில் நடைபெறும் 'Youth Counseling' என்ற உலக மகாநாடொன்றிற்குப் பிரதிநிதியொருவராகப் பல்கலைக்கழகம் அவரை நியமித்தது, அதற்கான பல்கலைக்கழகத்திற்கு ஏற்பட்ட செலவு ரூபா.1,000,000/-. அவர் குறித்த மகாநாட்டில் சிறந்த தொகுப்பாளர் விருதினைப் பெற்றதுடன் பாராட்டுச்சான்றிதளுடன் கூடியதான $1000 பணப்பரிசினையும் பெறுகின்றார்.

மேலும், 'Positive Thinking' எனும் தலைப்பிடப்பட்ட நூலொன்றிற்கு அவர் நூலாசிரியர் மற்றும் வெளியீட்டாளராவார். துரிதிஷ்டவசமா, கோவிட் பெருந்தொற்றுக் காரணமாக சுமார் ரூபா. 3,000,000/- பெறுமதியான நூல்களை அவரால் விற்கமுடியாமல் போனதுடன் அவை தனியார் அச்சகமொன்றில் அடுக்கிவைக்கப்பட்டன. அச்செலவுகளை ஈடுசெய்வதற்கு அந்நூல்கள், மூன்று மடிக்கணனிகள் மற்றும் அச்சுப்பொருட்களைத் தனது சக வெளியீட்டாளரொருவருக்கு அவர் விற்பனை செய்கிறார். இருந்த போதிலும், அவர் தனது உத்தியோகபூர்வ பயணத்தின் போது சிங்கப்பூரில் நடைபெற்ற சர்வதேசப் புத்தகக் கண்காட்சியொன்றில் சிறந்த நூலிற்கான விருதினைப் பெற்றார். அவர் இலங்கையின் ஏழ்மையான மக்களுக்கு உதவும் பொருட்டு அரச சமூக நல நிதிக்குப் பணப்பரிசான ரூபா.500,000/- த்தினை நன்கொடையாக வழங்கினார்.

பொருத்தமான நியதிச்சட்ட ஏற்பாடுகள் மற்றும் தீர்க்கப்பட்ட வழக்குகளுடன் தொடர்புறுத்தி 2021/2022 ஆம் வரிமதிப்பீட்டாண்டிற்கான பேராசிரியர். ரவி சுப்பிரமணியம் அவர்களின் வரிக் கடப்பாடுகளை ஆராய்க.

(100 புள்ளிகள்)

4. **(அ) அல்லது (ஆ)** பகுதிக்கு விடையளிக்குக:

அ) ‘வருமானவரி மதிப்பீடென்பது வரிசெலுத்தினர்களால் தமது வரிவிபரத்திரட்டுக்களில் தாக்கல் செய்யப்பட்ட விபரங்களைச் சேகரித்து மற்றும் அவற்றைப் பெற்றுக் கொள்கின்ற நடைவடிக்கையாகும். ஒவ்வொரு நிதியாண்டின் முடிவிலும், அனைத்து நபர்களும் அங்கங்களும் தம்மால் சம்பாதிக்கப்பட்ட வருமான அளவினையும் செலுத்த வேண்டிய வரியினையும் சுயமாகக் கணக்கிட்டு வருமான வரிவிபரத்திரட்டினைச் சமர்ப்பிக்க வேண்டும். எனவே, வருமான வரிவிபரத்திரட்டு சமர்ப்பித்ததன் பின்னரே வருமானவரி மதிப்பீடு நடைபெறும்.’

2017ம் ஆண்டின் 24ம் இலக்க உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் ஏற்பாடுகளை தொடர்புறுத்தி மேற்குறிப்பிட்ட கூற்றினை விமர்சனரீதியாக மதிப்பிடுக.

ஆ) ‘இலங்கையின் உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் அத்தியாயம் XIII ஆனது வரிசெலுத்துவோர் வரிமதிப்பீடொன்றினை அல்லது உண்ணாட்டரசிறைத் திணைக்களகத்தின் அதிகாரிகளின் வேறு தீர்மானங்களைச் சவாலுக்கு உட்படுத்துவதற்கும் வரிசெலுத்துனர்கள் மற்றும் வருமானவரி ஆணையாளர் தலைமையதிபதி (Commissioner General) ஆகிய இருவருக்கும் நடபடிமுறைப் பாதுகாப்புக்கள் மற்றும் தேவையான கால அவகாசங்களை வழங்கும் செயல்முறையினை மேலிட்டுக்காட்டுகின்றது. குறிப்பாக, இலங்கையின் உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் அக்குறிப்பிட்ட அத்தியாயமானது நெறிமுறைப்படுத்துவதோடு, மீளாய்வு மற்றும் மேன்முறையீட்டுச் செயல்முறைகளைப் பயனுள்ளதாகவும் திறமையானதாகவும் ஆக்குகின்றது.’

பொருத்தமான ஏற்புடைய சட்டங்கள் மற்றும் தீர்ப்புச்சட்டங்களின் ஆதாரத்துடன் வரி மேன்முறையீட்டுச் செயல்முறையினை (tax appeals procedure) விமர்சன ரீதியாக மதிப்பிடுக.

(100 புள்ளிகள்)

5. ‘Kidde Taste (Pvt) Ltd’ என்பது இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட தனியார் கம்பனியொன்றாகும். குழந்தைகளுக்கான உணவுகள் மற்றும் ஆற்றல் ஊக்குவிக்கும் (energy boosters) உற்பத்திகளைச் செய்வது அக்கம்பனியின் பிரதான வியாபாரமாகும். அக்கம்பனியானது 2021/2022 வரிமதிப்பீட்டாண்டில் பின்வரும் செலவுகளைச் செய்துள்ளது.

அ) இயற்கை ஆற்றல் ஊக்குவிப்பு (energy boosters) உற்பத்தியொன்றிற்கான புதிய செயன்முறைச் சூத்திரத்திற்கான (formula) ஆக்கவுரிமை (patent) ஒன்றினைப் பெறுவதற்கு ஏற்பட்ட சட்ட மற்றும் பதிவுச்செலவுகள் ரூபா.1,000,000/-

(20 புள்ளிகள்)

ஆ) கடந்த இரண்டு வருடங்களாகக் காலமுறைத் (periodical) தர உத்தரவாதச் சான்றிதழைச் சமர்ப்பிக்கத் தவறியமைக்காக National Accreditation Authority of Sri Lanka இக்குச் செலுத்திய அபராதம் ரூபா.500,000/- .

(20 புள்ளிகள்)

இ) கம்பனியின் ஆராய்ச்சி மற்றும் மேம்படுத்தும் உத்தியோகத்தர்களுக்குக் அறிவூட்டுவதுற்கு குழந்தைகள் ஆராய்ச்சியில் சிறந்து விளங்கும் வெளிநாட்டு ஊட்டச்சத்து நிபுணர்களை அமர்த்துவதற்கான செலவு ரூபா.1,500,000/- .

(30 புள்ளிகள்)

ஈ) தொடர்ச்சியான மின்வெட்டுக்கள் காரணமாகப் பழைய குளிர்பதன அமைப்பானது சேதமடைந்ததனால் உள்ளகக் குளிர்பதன அமைப்பு கொள்வனவு செய்யப்பட்டு நிறுவுவப்பட்ட மேம்படுத்தல் செலவுகள் உட்பட தொழிற்சாலைப் பராமரிப்புச் செலவுகள். அந்நிறுவுதலுக்கு ஏற்ப்பட்ட மொத்தச் செலவு ரூபா.3,500,000/- .

(30 புள்ளிகள்)

(100 மொத்தப் புள்ளிகள்)

6. மூலதன ஆதாயத்தின் மீதான வரியானது தரப்பினரிடையே வருமான இடைவெளியினைக் குறைக்குமென்பதுடன் வறுமையொழிப்பிற்கான அரசாங்கத்தினது செயற்பாடுகளிற்கு உதவிபுரியுமென்பது கொள்கை வகுப்பாளர்களின் கருத்தாகும். இதன் பின்னணியில் 2017ம் ஆண்டின் 24ம் இலக்க சட்டமானது வருமான வரியுடன் 'முதலீட்டுச் சொத்துக்களின் தேறிப்பெறுகையிலிருந்தான ஈட்டுகைகளை' ('Gains from the realization of assets and liabilities') தொடர்பான ஏற்பாட்டினை மீள அறிமுகப்படுத்தியுள்ளது.

அ) 'முதலீட்டு வருமானம்' மற்றும் 'முதலீட்டுச் சொத்துக்களின் தேறிப்பெறுகையிலிருந்தான ஈட்டுகைகள்' என்பவற்றுக்கிடையிலான வேறுபாட்டினை மதிப்பிடுக.

(20 புள்ளிகள்)

ஆ) 2017ம் ஆண்டின் 24ம் இலக்க சட்டத்தின் கீழ் மூலதன ஆதாய வரியினைக் கணக்கிடுதல் தொடர்பான பொருத்தமான ஏற்பாடுகளைப் பகுப்பாய்வு செய்க.

(40 புள்ளிகள்)

இ) மேற்குறிப்பிட்ட சட்டத்தின் கீழ் அறிமுகப்படுத்தப்பட்ட பொறிமுறையானது கொள்கை வகுப்பாளர்களது எதிர்பார்ப்பினைப் பூர்த்திசெய்யும் திறன் கொண்டதா என்பது குறித்து விமர்சன ரீதியாகக் கருத்துரைக்க.

(40 புள்ளிகள்)

(100 மொத்தப் புள்ளிகள்)

**************